# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# குடிநீர் திட்டம்

கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோக மேம்பாடு செய்யும் பொருட்டு ஒங்கிணைந்த நகர்புற வளர்ச்சித்திட்டம் (IUDM) 2018–19 ன் கீழ் குடிநீர் நீர் ஆதாரம் மற்றும் விநியோகம் மேம்பாடு செய்யும் பணியினை ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை அரசாணை எண் G.O. (MS) No.82 நாள்.23.08.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 31.01.2019–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 19.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. திட்டக்காலம் :– 18 மாதங்கள்

இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரம்

- தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக மின் மோட்டார் மற்றும் பம்புகள் மாற்றி அமைக்கும் பணி (Raw water and Clear water)
- தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள் புதுப்பிக்கும் பணி
- தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உந்து செய்ய 17.938 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதியதாக னுஐ குழாய்கள் (Pumping main) அமைக்கும் பணி
- குடிநீர் உந்து குழாய் (Pumping main) வாய்க்கல் மற்றும் கீரிப்பள்ளம் ஓடையை கடந்து செல்வதால் அதன் குறுக்கே பாலம் அமைக்கும் பணி (Pipe carrying bridge)
- நகரின் 30 வார்டுகளிலும் உள்ள அனைத்து பகுதிகளிலும் குடிநீர் விநியோக குழாய் 130.941 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதியதாக DI மற்றும் ழுனுஞநு குழாய்கள் அமைக்கும் பணி (Distribution main)
- நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் (19491 எண்ணிக்கை) புதியதாக குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணி

இத்திட்டத்தின் குடிநீர் விநியோகத்தில் 500 முதல் 2000 குடியிருப்புகள் அடங்கிய 28 DMA (District metering area) பிரிக்கப்பட்டு அனைத்து குடிநீர் இணைப்புகளும் போதிய அழுத்தத்துடன் தினசரி சீராக குடிநீர் கிடைக்கும் வகையில் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு முடிவுறும் நிலையில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வீதம் தினசரி குடிநீர் வழங்கப்படும்.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி